RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 207 | ஜூலை.30 2025 புதன்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5




# மீண்டும் மலரட்டும் எடப்பாடியார் ஆட்சி : பி.ஆர்.செந்தில்நாதன் தீவிர பிரச்சாரம்

சிவகங்கை, ஜூலை.30-

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை வட்டாரத்தில் நகடி கிராமத்தில் ஸ்ரீ பெரியையா குந்தவை நாச்சியார் தம்பதியரின் மகன் (பி.ஆர்)பெரி.செந்தில்நாதன் ஆவார்.20 Jun 1967 ஆம் ஆண்டு பிறந்தார்.இவர் தேவகோட்டையில் உள்ள சேவுகன் அண்ணாமலை கல்லூரியில் இளநிலை அறிவியல் படித்தார். பெங்களூரு பல்கலைக் கழகத்தில் சட்டம் பயின்றார். 1988ஆம் ஆண்டில் அஇஅதிமுகவில் உறுப்பினராக சேர்ந்த இவர் 2013ஆம் ஆண்டில் சிவங்கை மாவட்ட அம்மா மன்றச் செயலாளராக பணியாற்றினார். ஏப்ரல் 2013 இல் அஇஅதிமுகவின் சிவகங்கை மாவட்டச் செயலாளராக நியமிக்கப்பட்டார்இவர் 2014ஆம் ஆண்டில் சிவகங்கை மக்களவைத் தொகுதியில், அஇஅதிமுக வேட்பாளராக போட்டியிட்டு 2,29,385 வாக்குகளில் வெற்றி பெற்றார். மேலும் இவரை எதிர்த்து போட்டியிட்ட காங்கிரசில் கார்த்தி சிதம்பரம் மற்றும் பாஜகவில் எச். ராஜா ஆகியோரை தோற்கடித்தார்.




2021 ஆம் ஆண்டில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் சிவகங்கை தொகுதியில் இருந்து அதிமுக சார்பில் சட்டமன்ற உறுப்பினரானார்.

பி ஆர் செந்தில்நாதன் சாதனைகள்

2013ம் ஆண்டு ஜூன் மாதம் முதல் 2014ம் ஆண்டு பிப்ரவரி மாதம் வரை தமிழ்நாடு பின்தங்கிய வகுப்பின் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் தலைவராக இருந்தார்.

2014 ஆம் ஆண்டு சிவகங்கை தொகுதியிலிருந்து திராவிட முன்னேற்ற கழக கட்சி வேட்பாளரான துரைராஜ் சுபாவை தோற்கடித்ததன் மூலம் பதினாறாவது மக்களவைக்கு பி.ஆர். செந்தில்நாதன் தேர்ந்தெடுக்கப் பட்டார். பின்னர் 1 செப்டம்பர் 2014 ஆம் ஆண்டு புதுக்கோட்டை மாவட்ட கண்காணிப்பு மற்றும் விழிப்புணர்வுக் குழுவின் தலைவராக செயல்பட்டார்.பின்னர் ஆலோசனைக் குழு, வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகதில் உறுப்பினர்.

ஆனார். வெளியுறவு விவகாரங்களுக்கான நிலைக் குழுவின் உறுப்பினர் ஆவார்.

விதிகள் குழுவில் உறுப்பினராக இருந்தார்.

தற்போது எடப்பாடியாரின் ஆட்சி மீண்டும் மலர தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளார்.








■ மதுரை மாவட்டம், மேலூர் கல்வி மாவட்டம், யா. ஒத்தக்கடை, குறு வட்ட அனைத்து வகை பள்ளிகளுக்கிடையேயான குழு மற்றும் தடகள விளையாட்டு போட்டிகளை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி மாவட்டவிளையாட்டுஅரங்கில் தொடங்கி வைத்தார்.



■ மதுரை மாவட்டம், புதிதாக கட்டப்பட்டு வரும் உசிலம்பட்டி சட்டமன்ற உறுப்பினர் அலுவலக கட்டடத்தை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 2024–2026ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டப்பேரவை அவைக் குழுத் தலைவர் இ.பரந்தாமன் (எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர்) ஆய்வு செய்து பார்வையிட்டார்.மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப.,குழு உறுப்பினர்களாகிய பெ.சு.தி.சரவணன் (கலசபாக்கம்) க.சிவகாமசுந்தரி (கிருஷ்ணராயபுரம்) நிவேதா எம்.முருகன் (பூம்புகார்) கே.பொன்னுசாமி (சேந்தமங்கலம் (தனி) செ.முருகேசன் (பரமக்குடி (தனி) பெ.ராமலிங்கம் (நாமக்கல்) மா.செந்தில்குமார் (கள்ளக்குறிச்சி (தனி) T.M.தமிழ்செல்வம் (ஊத்தங்கரை (தனி) அ.நல்லதம்பி (கங்கவல்லி) அ.பண்ணாரி (பவானிசாகர்) M.ராஜமுத்து (வீரபாண்டி) பொன்.ஜெயசீலன் (கூடலூர்) S.ராஜகுமார் (மயிலாடுதுறை) அவர்கள், பி. அய்யப்பன் (உசிலம்பட்டி) ஆகியோர் உடன் உள்ளனர்



■ தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 2024–2026ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டப்பேரவை அவைக் குழுத் தலைவர் இ.பரந்தாமன் (எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர்) மதுரை மாவட்டம், புதிதாக கட்டப்பட்டு வரும் திருப்பரங்குன்றம் சட்டமன்ற உறுப்பினர் அலுவலக கட்டடத்தை ஆய்வு செய்து பார்வையிட்டார்.மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப., குழு உறுப்பினர்களாகிய பெ.சு.தி.சரவணன் (கலசபாக்கம்) க.சிவகாமசுந்தரி (கிருஷ்ணராயபுரம்) நிவேதா எம்.முருகன் (பூம்புகார்) கே.பொன்னுசாமி (சேந்தமங்கலம் (தனி) செ.முருகேசன் (பரமக்குடி (தனி) பெ.ராமலிங்கம் (நாமக்கல்) மா.செந்தில்குமார் (கள்ளக்குறிச்சி (தனி) T.M.தமிழ்செல்வம் (ஊத்தங்கரை (தனி) அ.நல்லதம்பி (கங்கவல்லி) , அ.பண்ணாரி (பவானிசாகர்) M.ராஜமுத்து (வீரபாண்டி) , பொன்.ஜெயசீலன் (கூடலூர்) S.ராஜகுமார் (மயிலாடுதுறை) M.M. இராஜன்செல்லப்பா (திருப்பரங்குன்றம்) ஆகியோர் உடன் கலந்து கொண்டனர்.




■ மதுரை மாவட்டம் கிழக்கு ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட கொடிக்குளம் தாமரைப்பட்டி பூலாம்பட்டி ஆகிய ஊராட்சிகளுக்கான உங்களுடன் ஸ்டாலின் முகாம் ஒத்தக்கடையில் உள்ள தனியார் மஹாலில் நடைபெற்றது. வணிகவரி மற்றும் பத்திரப்பதிவு துறை அமைச்சர் மூர்த்தி கலந்து கொண்டு முகாமை பார்வையிட்டார். இம்முகாமில் கொடிக்குளம் தாமரைப்பட்டி பூலாம்பட்டி ஊராட்சிகளை சேர்ந்த பொதுமக்கள் ஏராளமான ஆர்வமுடன் கலந்து கொண்டு தங்களது கோரிக்கைகளை மனுக்களாக அளித்தனர்.இந்நிகழ்வில் கிழக்கு ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஜோதிராஜ் கதிரவன் துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கண்ணன் மனோகரன் கிழக்கு வட்டாட்சியர் மனேஷ்குமார்,துணை வட்டாட்சியர்கள் பாண்டியராஜன் செந்தில்நாதன் ,சமூக பாதுகாப்பு திட்ட தாசில்தார் தாமரைசெல்வி, உதவி திட்ட அலுவலர் குபேந்திரன், தாமரைப்பட்டி ஊராட்சி செயலாளர் விவேக் ,கொடிக்குளம் ஊராட்சி செயலாளர் செல்வம், பூலாம்பட்டி ஊராட்சி செயலாளர் நந்தகுமார் மற்றும் பல்வேறு துறைகளை சேர்ந்த அரசு அலுவலர்கள் அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

## நெற்குப்பையிலிருந்து வேந்தன்பட்டி செல்லும் வழியில் உள்ள பள்ளத்துப்பட்டி செம்பன் என்பவரிடம் எட்டு செப்பேடுகள் இருப்பதாக கிடைத்த தகவலை தொடர்ந்து

## 8 செப்பேடுகள் குறித்து காரைக்குடி அழகப்பா அரசு கலைக் கல்லூரியின் வரலாற்றுத் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் வேலாயுதராஜா மற்றும் புதுக்கோட்டைத் தொல்லியல் கழக தலைவர் ராஜேந்திரன் ஆய்வு

சிவகங்கை, ஜூலை.30

சிவகங்கை மாவட்டம் நெற்குப்பையிலிருந்து வேந்தன்பட்டி செல்லும் வழியில் உள்ள பள்ளத்துப்பட்டி அய்யனார் கோயிலுக்குப் பாத்தியப்பட்ட முத்தரையர் சமுதாயத்தைச் சேர்ந்த செம்பன் என்பவரிடம் எட்டு செப்பேடுகள் இருப்பதாக வேந்தன்பட்டியைச் சேர்ந்த பேராசிரியர் பாலசுப்ரமணியன் தந்த தகவலையடுத்து அங்கு சென்று அந்த எட்டு செப்பேடுகளையும் காரைக்குடி அழகப்பா அரசு கலைக் கல்லூரியின் வரலாற்றுத் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் வேலாயுதராஜா மற்றும் புதுக்கோட்டைத் தொல்லியல் கழக தலைவர் ராஜேந்திரன் ஆகியோர் ஆய்வு செய்தனர். இவற்றில் ஆறு செப்பேடுகளில் பொறிக்கப்பட்டுள்ள சாலிவாகன சகாப்த ஆண்டும், தமிழ் ஆண்டுகளும் பொருந்தி வராமல் இருந்தாலும் எழுத்தமைதியைக் கொண்டு இது 17 ஆம் நூற்றாண்டை சேர்ந்தது என அறிய முடிகிறது. இரண்டு செப்பேடுகள் காலம் குறிப்பிடப்படாமலும், காலத்தால் பிற்பட்டதாகவும் உள்ளன.



ஐந்தலை நாடு என்று இச்செப்பேடு குறிப்பிடும் பகுதி, ஒரு சமுதாய நாடாக வேந்தன்பட்டி, முறையூர் சூரக்குடி,நெற்குப்பை, திருக்களம்பூர், ஆத்திகாடு தெக்கூர் ஆகிய கிராமங்களை உள்ளடக்கியதாக உள்ளது.

இச்செப்பேடுகளில் புறமலை சூழ்ந்த பொன்னமராவதி நாட்டில் இருந்த மங்கலக்கோட்டையின் மேற்கு, கிழக்கு, வடக்கு மற்றும் தெற்குக் கோட்டையின் காவலர்களாக இருந்த பூத முத்திரி, சூர முத்திரி, மன்ன முந்திரி மற்றும் தொண்டுகாடன் முத்திரி,சோலைக் கூத்தன் முத்திரி, முத்துராச முத்திரி போன்றோர் இருந்துள்ளனர் என்றும், இப்பகுதியில் உள்ள பெருமாள் கோவில், அழகிய நாயகி அம்மன் கோவில், அய்யனார் கோவில் திரவியங்களான வெள்ளி, வெண்கலப் பொருட்களைப் பாதுகாத்து காவல் காத்தமைக்காகவும், கோட்டை காவல் இருந்ததைக்காவும், கொடுக்கப்பட்ட பணி செய்ததற்குரிய மானிய நிலமான உம்பளமாக ஏனாதிக் கம்மாய் பெரிய மடைப் போக்கில் ஆறு செய் நிலம் மன்ன முத்திரி, சூர முத்திரி, பூத முத்திரி ஆகியோருக்கு வழங்கப்பட்ட செய்தியைக் குறிப்பிடுகிறது. மேலும் அழகிய நாயகி அம்மன் கோயிலில் மாலை மரியாதை வழங்குவதைப் பற்றியும் கூறுகிறது.

மற்றொரு செப்பேட்டில் பள்ளத்தூர் பாளையநாட்டைச் சேர்ந்த தொறாக் குயிலன், வெள்ளையன் பெரிய மெய்யன், சின்ன மெய்யன், ஆகியோர் வேட்டைக்குச் சென்றபோது வைகையில் தண்ணீர் பெருகி வரும் போது அதில் கிடைத்த பெட்டியை எடுத்துப்பார்த்து அதிலிருந்து சிலைகளை எடுத்து பள்ளத்துப்பட்டி அய்யனார் கோயில் சனி மூலையில் அறை செய்து அதில் வைத்த செய்தியை குறிப்பிடுகிறது. அத் திரவியத்தைப் பாதுகாப்பதற்கு பூத முத்திரி மற்றும் சூர முத்திரிக்கு வழங்கப்பட்ட நிலக்காணியையும் கூறுகிறது.

மேலும், சூரன் நகுலன் என்ற இருவருக்கும் ஒப்படைக்கப்பட்ட நிலப்பகுதிகளை பற்றியும் கோவில் மரியாதையைப் பற்றியும் இவை கூறுகின்றன. இன்றும் பொன்னமராவதியில் உள்ள அழகிய நாயகி அம்மன் கோயிலில் திருச்சுற்றுப் பகுதியில் அறை எழுப்பி நகுலன் அம்பலம் என்பவரது பாதக்குறடுகளை வைத்து வழிபடப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

அதுபோல வேடன் சிலுகன் என்பவனுக்கு அழகிய நாயகி அம்மன் கோயில் மரியாதை, பெரிய குளம், அடிமடை பாய்ச்சல் ஆகியவற்றை விட்டுக் கொடுத்தும், அஞ்சலை நாடுகளில் மங்கலக்கோட்டையின் வடபுறத்தை வேடன் சிலுகன் என்பவருக்கு பலிக்காணியாக வீரகாங்கயன் விட்டுக் கொடுத்த செய்தியையும் கூறுகிறது.

இங்கு உள்ள செப்பேடுகளில் கொடுத்தவர் கையொப்பமாக மங்கலக்கோட்டை மளுவராயன், வீர காங்கயன், பள்ளத்தூர் பாளைய அதிபதிகளாக இருந்த தொறாக் குயிலன் வெள்ளையன், பெரிய மெய்யன், சின்ன மெய்யன் மற்றும் வல்லம்பத்தேவர் ஆகக் கொண்டான், சின்ன தேவர், பெரியதேவர் ஆகியோர் பெயர்களும் மேகராச பாண்டியன் என்பவரது பெயரும் காணப்படுகின்றன.

இச்செப்பேடுகளை எழுதிய ஆசாரிகளாக நலன் ஆசாரி மற்றும் பெருமாள் ஆசாரி ஆகியோரது பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. மேலும் செப்பேடுகளில் குறிப்பிடப்படும் மணலூரு மங்கலக்கோட்டை என்பது தற்போதைய ஏனாதிமங்கலம் என்று கருத முடிகிறது. பள்ளத்தூர் பாளையம் தற்போது பள்ளத்துப்பட்டி என்றே அழைக்கப்பட்டு வருகிறது.

மேலும் செப்பேடுகளில் பூலாங்குறிச்சி, காஞ் சிரங்குறிச்சி, ஆவாம்பட்டி, மனக்குடி பண்ணை, கீழ் குறிச்சி போன்ற ஊர்களின் பெயர்களும், அழகிய நாயகி அம்மன், அடைக்கலங்காத்த அய்யனார், பரியா மருது அய்யனார், ஆத்திக்காட்டு அய்யனார், குறுந்தடிக் கருப்பர், தச்சன் கருப்பர் ஆகிய தெய்வங்களின் பெயர்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. மேலும் முன்னோர் மரபை விளக்கும் மெய்க்கீர்த்தி இச்செப்பேடுகளில் இடம் பெற்றுள்ளது. ஒரு செப்பேட்டில், இதற்கு அழிவு ஏற்படுத்தினால் கங்கை கரையில் காராம் பசுவைக் கொன்ற பாவத்திற்கு ஆளாவார்கள் என்ற ஓம்படைக்கிளவியும் காணப்படுகிறது.

இந்த செப்பேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள சூர முத்திரி என்பவரின் நினைவாக வேந்தன்பட்டியில் ஒரு பகுதி சூரன் கோடங்கி வளவு என்று இன்றுவரை அழைக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## வேலூர் அணைக்கட்டில், மத்திய அரசால் புவிசார் குறியீடு பெற்ற ருசி மிகுந்த ஒடுக்கத்தூர் கொய்யாவுக்கு இன்றைய விலையிலிருந்து கொள்முதல் விலையை 50 சதவீதமாக உயர்த்தி வழங்க கொய்யா விவசாயிகள் தமிழக அரசுக்கு கோரிக்கை

## கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு 30 சதவீதத்திற்கும் மேல் மகசூல் குறைவு என கொய்யா விவசாயிகள் வேதனை

வேலூர், ஜூலை.30

வேலூர் மாவட்டம், அணைக்கட்டு அடுத்த ஒடுகத்தூர், ஆலங்காயம் பகுதிகளில் விவசாயிகள் அதிகம் கொய்யா செடிகள் பயிர் செய்து வருகின்றனர். அதிக விளைச்சல் மற்றும் ஆஹா ருசியோ ருசி என்ற அளவில் இப்பகுதியில் கொய்யாவை விளைவித்து தமிழ்நாட்டிற்கு பெருமையை சேர்த்துள்ளதால், மத்திய அரசு புவிசார் குறியீடும் வழங்கியுள்ளது. இதில் சிவப்பு ஹைபிரிட், அலகாபாத், சிவப்பு கொய்யா மற்றும் நாட்டு கொய்யா என பல்வேறு வகைகளில் கொய்யாவை அதிகம் விளைவித்து ஏற்றுமதி செய்து வருகின்றனர். இதன் ருசியோ சொல்ல முடியாத அளவில் சாதனை படைத்துள்ளது.





இந்த நிலையில் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு கொய்யாவின் மகசூல் 30 சதவீதத்திற்கும் மேலாக குறைந்துள்ளதாக விவசாயிகள் வேதனை தெரிவித்து வருகின்றனர். இன்றைய கொய்யாவின் விலையிலிருந்து, கொய்யாவின் கொள்முதல் விலைகளை 50சதவீதமாக விலையை உயர்த்தி விலை நிர்ணயித்து வழங்க வேண்டியும், கொய்யா விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்த வழிவகை செய்ய வேண்டியும் தமிழக அரசுக்கு கொய்யா விவசாயிகள் கோரிக்கை வைத்து வருகின்றனர்.

## வேலூர் திருப்பத்தூர் வனப்பகுதிகளில் ஆடு, மாடுகள், குரங்குகள், மான்கள் மற்றும் வனவிலங்குகளுக்கு அமைக்கப்பட்ட குடிநீர் தொட்டிகளில் குப்பைகூளம்... நோ வாட்டர்.

## வனவிலங்குகள் குடிநீருக்கு தவிக்கும் அவலநிலை... வனவிலங்குகளின் தாகத்திற்கு குடிநீர் வைக்குமா இந்த அரசு...?

வேலூர், ஜூலை.30

வேலூர் மாவட்டம், ஒடுகத்தூர் வாணியம்பாடி வனச்சரக வனப்பகுதிகளில் வேலூர் டு திருப்பத்தூர் ஆலங்காயம் செல்லும் சாலையில், வனப் பகுதிக்குட்பட்ட இடத்தில் சாலை அமைக்கப்பட்டுள்ளது. வனத்துறை பகுதிக்கு உட்பட்ட இடங்களில், இங்கு வனவிலங்குகள் அதிகம் சுற்றி திரிவது வழக்கம், இங்கு அதிகப்படியாக ஆடு மாடுகள் குரங்குகள் மான்கள் போன்ற வனவிலங்குகள் அதிகம் காணப்படுகிறது. சுமார் 10 கிலோ மீட்டர் வரை எங்கும் நீரின்றி தவிக்க கூடிய சூழ்நிலை இருப்பதால், சாலை ஓரங்களில் ஆங்காங்கே









வனத்துறை சார்பில் சிறுசிறு தொட்டிகள் அமைக்கப்பட்டு வனவிலங்குகளுக்கு குடிநீரை தொட்டியில் நிரப்பி வருவது வழக்கம், ஆனால் தற்போது இந்த நடைமுறையை வனத்துறையினர் பின்பற்றாமல் மழைக்காலம் தானே என அலட்சியம் காட்டி மறந்து வருவதாக சமூக ஆர்வலர்கள் கூறுகின்றனர். எனவே இங்கு மட்டுமின்றி தமிழ்நாடு முழுவதும் ஆங்காங்கே வனத்துறையினர் கோடை காலங்கள் மட்டுமின்றி, மழைக்காலமாக இருந்தாலும் வாட்டி விதைக்கும் வெயிலில் குடிநீரின்றி சிக்கித் தவிக்கும் வனவிலங்குகள், இதனடிப்படையில் தொடர்ச்சியாக விளங்குகளுக்கு குடிநீர் வைத்து வருகின்றனர். ஒரு சில இடங்களில் இந்த இடத்தில் நடப்பது போன்று அந்தெந்த பகுதிகளில் வனத்துறையினர் குடிநீர் வைக்க மறந்து விட்டார்கள் என்பது உண்மையான கருத்து, இதில் அனைத்து பகுதி வன துறை சார்ந்த அனைவரையும் குறை கூற முடியாது, இந்த இடத்தில் இவர்கள் இந்த பணியை செய்யவில்லை, உடனடியாக இந்த குடிநீர் நிரப்பும் பணிகளை மேற்கொள்ளவும் அந்த மாவட்ட ஆட்சியர்கள், சம்பந்தப்பட்ட துறை தலைமைச் செயலர் மற்றும் தமிழக அரசும், வனவிலங்குகள் பாதுகாக்கும் பொருட்டு முக்கிய பணிகளான வனவிலங்கு குடிநீர் வைப்பதை, இடைவிடாமல் செய்ய வேண்டி சமூக உணர்வுடன் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மாலை தந்தி
புதன்கிழமை 30.7.2025

# சிவகங்கை மாவட்டத்தில் 2025 ஆம் ஆண்டிற்கு "தமிழ்ச்செம்மல்" விருதுக்கான விண்ணப்பங்கள் வரவேற்பு

## மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி தகவல்

சிவகங்கை, ஜூலை.30

சிவகங்கை மாவட்டத்தில் தமிழ் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டு வரும் ஆர்வலர்களைக் கண்டறிந்து, அவர்தம் தமிழ்த்தொண்டினைப் பெருமைப்படுத்தும் விதமாக, தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித்துறை ஆண்டுதோறும் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் ஒரு தமிழ் ஆர்வலரைத் தெரிவு செய்து, அவர்களுக்கு "தமிழ்ச்செம்மல்" விருது வழங்கி சிறப்பித்து வருகிறது. அதன்படி, "தமிழ்ச்செம்மல்" விருதாளர்களுக்கு ரூ.25,000/ பரிசுத்தொகை மற்றும் பாராட்டுச்சான்றிதழ் வழங்கப்படும்.

அவ்வகையில், 2025 ஆம் ஆண்டிற்கான "தமிழ்ச்செம்மல்" விருதுக்கான விண்ணப்பங்கள் சிவகங்கை மாவட்டத்திலுள்ள தமிழ் ஆர்வலர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன. மேலும், விருதுக்குரிய விண்ணப்பப்படிவத்தை தமிழ் வளர்ச்சித் துறையின் www.tamilvalarchithurai.tn.gov.in என்ற வலைத்தளத்தில் "விண்ணப்பப்படிவங்கள்" என்ற தலைப்பின்கீழ் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். தமிழ்ச்செம்மல் விருதுக்கு விண்ணப்பிக்கும் தமிழ் ஆர்வலர்கள், விருதுக்கான விண்ணப்பத்தினை இருபடிகளில் உரியவாறு நிறைவு செய்து, தன்விவரக்குறிப்பு, இயற்றிய நூல்கள், கட்டுரைகள் ஏதேனும் வெளியிடப்பட்டிருப்பின் அவை பற்றிய விவரங்கள் (பட்டியலோடு ஒவ்வொன்றிலும் இரு படிகள் இணைக்கப்பட வேண்டும்), தமிழ்ச்சங்கங்கள், தமிழ் அமைப்புகளில் ஏதேனும் பொறுப்பில் அல்லது உறுப்பினராக இருப்பின் அதுபற்றிய விவரம், விருதுக்குத் தகுதியாகக் குறிப்பிடத்தக்கப் பணிகள்,

தமிழறிஞர்கள் இருவரின் பரிந்துரைக்கடிதம், மாவட்டத்தில் செயற்படும் தமிழ் அமைப்புகளின் பரிந்துரைக் கடிதம், வட்டாட்சியர் வழங்கும் குடியிருப்புச் சான்றிதழ் அல்லது ஆதார் அட்டை ஒளிப்படி, குடும்ப அட்டை ஒளிப்படி மற்றும் இரண்டு கடவுச்சீட்டு அளவிலான நிழற்படங்களுடன், ஆற்றிய தமிழ்ப்பணிகளுக்கானச் சான்றுகளையும் இணைத்து சிவகங்கை மாவட்டத் தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் அலுவலகத்தில் வருகின்ற 25.8.2025ஆம் தேதிக்குள் கிடைக்கப்பெறும் வகையில் நேரிலோ அல்லது அஞ்சல் வழியாகவோ அனுப்பி வைத்திடல் வேண்டும்.

மேலும், விண்ணப்பம் மற்றும் "தமிழ்ச்செம்மல்" விருது குறித்த கூடுதல் விவரங்களுக்கு, சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் செயல்பட்டு வரும் மாவட்டத் தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் அலுவலகத்தை 04575 241487 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு விபரங்கள் பெறலாம் என மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி, தெரிவித்துள்ளார்.






■ மதுரை மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகை பெரியார் அரங்கில் மாமன்றக் கூட்டம் மேயர் இந்திராணி பொன்வசந்த் தலைமையில் நடைபெற்றது அருகில் ஆணையாளர் சித்ரா விஜயன், இ.ஆ.ப., துணை மேயர் தி.நாகராஜன் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.



# கன்னியாகுமரியில் காவல்துறை சார்பில் SSI.வில்சன் பெயரில் காவலர் தங்கும் விடுதி

கன்னியாகுமரி, ஜூலை.30-

சுட்டுக்கொல்லப்பட்ட எஸ்ஜ வில்சனின் பெயரில் கன்னியாகுமரியில் கட்டப்பட்டுள்ள காவலர்கள் தங்கும் விடுதியை கண்காணிப்பாளர் ஸ்டாலின் முன்னிலையில், வில்சனின் மனைவி ஏஞ்சல்மேரி திறந்து வைத்தார்.

கன்னியாகுமரியில் அமைக்கப்பட்டுள்ள காவலர் தங்கும் விடுதிக்கு. பணியின் போது சுட்டுக் கொல்லப்பட்ட சிறப்புசப் இன்ஸ்பெக்டர் வில்சன் பெயர் வைக்கப்பட்டுள்ளது. இந்த விடுதி நேற்று திறக்கப்பட்டது.

குமரி மாவட்டம் களியக்காவிளையில் போலீஸ் சோதனை சாவடியில், கடந்த 2020ம் ஆண்டு ஜனவரி 8ம்தேதி, பாதுகாப்பு பணியில் இருந்த சிறப்பு சப் இன்ஸ்பெக்டர் வில்சன் (57) துப்பாக்கியால் சுட்டும், கத்தியால் குத்தியும் கொலை செய்யப்பட்டார். இந்த சம்பவம் நாடு முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்த கொலை தொடர்பாக திருவிதாங்கோட்டை சேர்ந்த அப் துல் ஷமீம் (29), கோட்டாரை சேர்ந்த தவுபீக் (27) உள்ளிட்டோரை போலீசார் கைது செய்தனர். இது தொடர்பான வழக்கு என்.ஐ.ஏ.க்கு மாற்றப்பட்டு உள்ளது.பணியின் யின் போது சுட்டு கொல்லப்பட்ட சிறப்பு சப் இன்ஸ்பெக்டர் வில்சனை கவுரவிக்கும் வகையில், கன்னியாகுமரியில் சமீபத்தில் கட்டப்பட்ட காவலர் தங்கும் விடுதிக்கு, அவரது பெயர் வைக்கப்பட்டுள்ளது. இந்த விடுதி நேற்று காலை திறக்கப்பட்டது. மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின் முன்னிலையில், வில்சனின் மனைவி ஏஞ்சல்மேரி இந்த காவலர் விடுதியை திறந்து வைத்தார். அப்போது அவர் கண்ணீர் மல்க, கண்காணிப்பாளர் ஸ்டாலின் மற்றும் போலீஸ் அதிகாரிகளுக்கு நன்றி கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் ஏ டி எஸ் பி மதியழகன், டடிஎஸ்பி ஜெயச்சந்திரன், இன்ஸ் பெக்டர்கள் சரவணன், சத்தியபாமா, எஸ்.ஐ. ரகு பாலாஜி, ரோகினி பொறி யியல் கல்லூரி தாளாளர் விஷ்ணு உள்பட பலர் கலந்து கொண்டனர். பின்னர் எஸ்.பி. ஸ்டாலின் கூறுகையில், இந்த விடுதியில் 13 அறைகள் உள்ளன. ஒரு நாள் வாடகை ரூ.125 ஆகும். கன்னியாகுமரிக்கு வரும் போலீசார், ஓய்வு பெற்ற போலீசார் இந்த விடுதியை பயன்படுத்திக் கொள்ளலாம் என்றார். கன்னியாகுமரி காவல் நிலைய வளாகத்தில், இந்த விடுதி அமைக்கப் பட்டுள்ளது.

# "உங்களுடன் ஸ்டாலின்" சிறப்பு திட்ட முகாமானது நாளை காரைக்குடி மாநகராட்சி, தேவகோட்டை , இளையான்குடி, திருப்புவனம், சிவகங்கை, கல்லல் ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவைகளில் குறிப்பிட்ட பகுதிகளுக்கான முகாம்கள், குறிப்பிட்ட பகுதிகளில் நடைபெறவுள்ளது

சிவகங்கை, ஜூலை.30

சிவகங்கை மாவட்டத்தில் 15.7.2025 அன்று முதல் செப்டம்பர் 2025 வரை ஒவ்வொரு வாரமும், நான்கு நாட்களில் நாள் ஒன்றுக்கு 6 முகாம் வீதம் மொத்தம் 215 முகாம்கள் நடைபெறவுள்ளது.

அதன்படி, நாளை ஜூலை 31ஆம் தேதி காரைக்குடி மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்: 31, 33, 36 ஆகிய பகுதிகளுக்கென சேது மீனாள் மஹாலிலும், தேவகோட்டை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட திருமணவயல், நாகாடி ஆகிய ஊராட்சி பகுதிகளுக்கென திருமணவயல் ஊராட்சியிலுள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியிலும், இளையான்குடி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட எ.மெய்யனேந்தல், கச்சாத்தநல்லூர், கீழநெட்டூர், எ.நெடுங்குளம், விஜயன்குடி ஆகிய ஊராட்சி பகுதிகளுக்கென மெய்யனேந்தல் ஊராட்சியிலுள்ள நடுவலசை சமுதாயக்கூடத்திலும், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மழவராயனேந்தல், மாரநாடு, கே.பெத்தனேந்தல், திருப்பாச்சேத்தி ஆகிய ஊராட்சி பகுதிகளுக்கென திருப்பாச்சேத்தி ஊராட்சியிலுள்ள சோணைமுத்து மஹாலிலும்,




சிவகங்கை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட அரசனூர் ஊராட்சி பகுதிக்கென அரசனூர் ஊராட்சிலுள்ள சமுதாயக்கூடத்திலும், கல்லல் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சிராவயல், கே.ஆத்தங்குடி, என்.வைரவன்பட்டி, தட்டட்டி, கம்பனூர், நாச்சியார்புரம் ஆகிய ஊராட்சி பகுதிகளுக்கென சிராவயல் சமுதாயக்கூடத்திலும் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமானது நடைபெறவுள்ளது.

மேலும், "உங்களுடன் ஸ்டாலின்" முகாம்களின் வாயிலாக, நகர்புறம் மற்றும் கிராமப்புறங்களில் அந்தந்த துறைகளால் சேவைகள் வழங்கப்படும். அதில், நகர்புறங்களில் நடத்தப்படும் முகாம்களில் 13 துறைகளின் மூலம் 43 சேவைகளும், கிராமப்புறங்களில் நடத்தப்படும் முகாம்களில் 15 துறைகளின் மூலம் 46 சேவைகளும் வழங்கப்படவுள்ளது.

இதில் சொத்துவரி, குடிநீர் வசதி உரிமங்கள் மற்றும் அனுமதி, கழிவு நீர் இணைப்பு, அடிப்படை வசதிகள், பராமரிப்பு, பிறப்பு இறப்பு சான்றிதழ்கள், காலி மனைவரி, தெரு வியாபாரி அடையாள அட்டை, சொத்து வரி பெயர் மாற்றம் மற்றும் கட்டிட அனுமதி பெறுவதற்கான விண்ணப்பம் ஆகியவைகள் நகர்புற நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் வாயிலாக வழங்கப்படவுள்ளது.

மேலும், பட்டாவில் பெயர் மாற்றம் மற்றும் பட்டா பெயர் திருத்தம், பட்டா சிட்டா நகல், பிறப்பு, இறப்பு சான்று வாரிசு சான்றிதழ், சாதிச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ் உள்ளிட்ட மனுக்களுக்கு இம்முகாமில் உடனடி தீர்வு காணும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி, குறிப்பாக கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத்தில் மனு அளித்திட விடுபட்ட தகுதியுள்ள பயனாளிகளும் இம்முகாம்களில் உரிய ஆவணங்களுடன் கலந்து கொண்டு மனு அளிக்கலாம்.

எனவே, இம்முகாமினை முறையாக பயன்படுத்திக் கொண்டு, தாங்கள் வசிக்கும் அந்தந்த பகுதியில் முகாம் நடைபெறும் நாளன்று, உரிய ஆவணங்களுடன் தங்களது கோரிக்கை மனுக்களை அளித்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி, தெரிவித்துள்ளார்.






# வேலூர் சத்துவாச்சாரியில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்

வேலூர் ஜூலை.30

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, சத்துவாச்சாரி மாநகராட்சி மண்டலம் 2, 18 வது வார்டு மடம் தெருவிலுள்ள செங்குந்தர் திருமண மண்டபத்தில் தமிழ்நாடு அரசின் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நடைபெற்றது.

இதில் சிறப்பு அழைப்பாளராக வேலூர் சட்டமன்ற உறுப்பினர் கார்த்திகேயன், வேலூர் மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார் ஆகியோர் பார்வையிட்டு மின்சார துறை சார்பில் மின் இணைப்பு பெயர் மாற்றம் ஆணையை பயனாளிக்கு வழங்கினர்.

இம்முகாமில் வேலூர் மாநகராட்சி ஆணையாளர் இலட்சுமணன், வேலூர் வட்டாட்சியர் வடிவேலு, சத்துவாச்சாரி மாநகராட்சி 2வது மண்டல குழு தலைவர் வினஸ் ஆர். நரேந்திரன், மண்டல உதவி ஆணையர் சதீஷ்குமார், சுகாதார அலுவலர் சிவக்குமார், மாமன்ற உறுப்பினர்கள் ஆர்.பி.ஏழுமலை, டி.சக்கரவர்த்தி, மாலதி சேகர் மக்கள் பிரதிநிதிகள் உள்ளிட்ட மகளிர் உரிமைத்துறை மகளிர் உரிமைத் தொகை துறை, சுகாதாரத்துறை, மின்சார துறை, வருவாய்த்துறை, சமூக நலன் துறை, மாற்றுதிறனாளிகள் நலன் துறை, சிறுகுறு தொழில் துறை, வேளாண்துறை, உள்ளிட்ட அனைத்து அரசுத்துறை அலுவலர்கள் பணியாளர்கள் கலந்துகொண்டு பொதுமக்களின் புகார்களை பதிவேற்றம் செய்தனர். இதில் பொதுமக்கள் பயனாளிகள் என பலர் கலந்து கொண்டனர்.



# வேலூர் சரக டிஐஜி தர்மராஜன் பொறுப்பேற்பு!!

வேலூர், ஜூலை.30-

வேலூர் மாவட்டம், வேலூர் காவல் சரகர் அலுவலகத்திற்கு டி.ஐ.ஜி.யாக பொறுப்பேற்க வந்த தர்மராஜனுக்கு காவல் துறையின் முழு மரியாதை வழங்கப்பட்டு

அதனை ஏற்றுக் கொண்டார். வேலூர் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் மயில்வாகனன் பூங்கொத்து கொடுத்து வரவேற்றார். டிஐஜி அலுவலகத்தில் கையெழுத்திட்டு, வேலூர், திருவண்ணாமலை, திருப்பத்தூர், இராணிப்பேட்டை மாவட்டங்கள் உள்ளடங்கிய வேலூர் சரக டிஐஜியாக தர்மராஜன் பொறுப்பேற்றுக் கொண்டார். இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்தனர். அவர் பேசியதாவதுவேலூர் மாவட்டத்தில் கொலை கொள்ளை குற்றங்கள் ஏன் அதிகரித்துள்ளது. என்பது குறித்து ஆய்வு செய்து அதை தடுக்க உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படும் என தெரிவித்துள்ளனர்.




# வேலூர் மாவட்ட திருமண மண்டபம் உரிமையாளர்கள் சங்கம் சார்பில் பேரவை கூட்டம்

வேலூர், ஜூலை.30

வேலூர் மாவட்டம், வேலூர் டவுன், நகராட்சி அலுவலகம் அருகில், பி தண்டபாணி மஹாலில், வேலூர் மாவட்ட திருமண மண்டபம் உரிமையாளர்கள் சங்கம் சார்பில் பேரவை கூட்டம், வேலூர், திருப்பத்தூர், இராணிப்பேட்டை, திருவண்ணாமலை மற்றும் காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களின் திருமண மண்டப உரிமையாளர்கள் சங்க பேரவை கூட்டம், தஞ்சம்மாள் துரைசாமி முதலியார் கல்யாண மண்டபம் உரிமையாளரும், கௌரவத் தலைவருமான டி.மணிநாதன், பிரியா மஹால் ஓனர், சங்க தலைவர் வி.என்.டி சுரேஷ், தண்டபாணி முதலியார் திருமண மஹால் ஓனர், சங்க செயலாளர் டி.மணிகண்டன் (எ) ராஜா, எஸ்.எஸ். மஹால் கணியம்பாடி, சங்க பொருளாளர் கே.எம்.ஜி. ஹரிஹரன் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக வேலூர் சட்டமன்ற உறுப்பினர் கார்த்திகேயன், டி.கே.எம். கல்லூரி உரிமையாளர், கௌரவத் தலைவர் டி.மணிநாதன், ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி விழாவை சிறப்பித்தனர். இந்த பேரவை கூட்டத்தில் 2024 25 ஆண்டு அறிக்கை, ஆய்வு செய்யப்பட்ட நிதி நிலை அறிக்கை படித்து பதிவு செய்து பேரவை ஒப்புதல் பெறுதல் போன்ற தீர்மானங்களும், திருமண மண்டப உரிமையாளர்களுக்கு நேரிடும் பிரச்சனைகள் குறித்தும் அதற்கு தீர்வு காண்பது எப்படி என்பது குறித்தும், மின்கட்டண உயர்வு சொத்து வரி உயர்வு லைசென்ஸ் பெறுவது எப்படி, காவல்துறை பாதுகாப்பு விதிமுறைகள், உரிமையாளர்களின் கருத்து கேட்டு அதற்குண்டான தீர்வை வழங்குவது குறித்தும், நடைமுறையில் திருமண மண்டபங்களுக்கு தேவையான சான்றிதழ்கள் பெறுவது எப்படி என்பது குறித்தும் விளக்க உரையாற்றி பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

இநிகழ்ச்சியில் திருமண மண்டபம் உரிமையாளர்கள் சங்க நிர்வாகிகள் பி.எம்.மஹால் பழனிவேல், ஜே.பி.எம் மஹால் முருகன், செல்வ விநாயகர் மஹால் பார்த்திபன், திருமகள் மஹால் செல்வமணி அருண்குமார் உட்பட பலர் பங்கேற்றனர்.




# கீழக்கோட்டையில் சர்வதேச புலிகள் தினவிழா கொண்டாட்டம்

காளையார் கோவில், ஜூலை.30

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஒன்றியத்திலுள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி கீழக்கோட்டையில் சிவகங்கை மாவட்ட தமிழ்நாடு அறிவியல் இயக்கம் சார்பில் சர்வதேச புலிகள் தினவிழா கொண்டாட்டம் நடைபெற்றது. பள்ளியின் அறிவியல் பட்டதாரி ஆசிரியரும் தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்டச் செயலாளருமான ஆரோக்கியசாமி தலைமை வகித்து சர்வதேச புலிகள் தின விழாவில் இந்திய தேசத்தின் தேசிய விலங்காக உள்ள வங்காளப்புலிகளின் முக்கியத்துவம் குறித்தும் உத்ராஞ்சல் மாநிலத்திலுள்ள கார்பெட் தேசிய பூங்காவில் தொடங்கி வைக்கப்பட்ட திட்டமானது புலிகளுக்கான வாழ்வாதாரங்களை தூய்மை கெடாமல் மீட்டெடுப்பதே இத்திட்டத்தின் குறிக்கோள் எனவும் கருத்துரையாற்றினார். மாணவ மாணவிகள் புலிகள் பாதுகாப்பு குறித்த உறுதிமொழி எடுத்துக் கொண்டார்கள். புலிகள் பற்றிய கட்டுரை அடங்கிய விஞ்ஞான துளிர் புத்தகங்கள் பரிசாக வழங்கப்பட்டன. புலிகள் குறித்த பல்வேறு செய்திகளை மாணவ மாணவிகள் வாசித்து தெரிந்துகொண்டனர்.





# நெய்க்காரப்பட்டி பேரூராட்சி பகுதியில் அதிகாரிகளின் ஆணவப் போக்கால் கண்ணீர் வடிக்கும் பொதுமக்கள்

திண்டுக்கல், ஜூலை.30-

திண்டுக்கல் மாவட்டம் பழனி அடுத்த நெய்க்காரப்பட்டி பேரூராட்சிக்கு உட்பட்ட மூன்றாவது வார்டு பகுதியில் பட்டியல் இன மக்கள் மேற்பட்ட 600க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர்..

இந்நிலையில் இந்தப் பகுதியில் பொதுமக்களுக்கு என்று பொதுகழிப்பிடம் கட்டப்பட்டு திறக்காமலே புதர் மண்டி காணப்பட்ட நிலையில் மீண்டும் நிதி ஒதுக்கி மறு சீரமைப்பு என்ற பெயரில் பெயரளவில் வர்ணம் பூசி திறக்கப்படாமலே பூட்டி வைத்தனர்.

இதனால் இந்த கட்டிடத்தில் புதர்கள் மண்டி பாம்பும் பல்வேறு உயிரினங்கள் வாழ்ந்து வருகின்றன..

தொடர்ந்து இப்பகுதி பெண்கள் பொது கழிப்பிட கட்டிடம் இல்லாததால் சாலையின் ஓரம் திறந்த வெளியில் மலம் கழிக்கும் அவல நிலை நாள்தோறும் அரங்கேறி வருகின்றது..

அந்த சாலையின் வழியே ஆண்கள் செல்லும் பொழுது பெண்களின் நிலை மிகவும் வேதனையாக உள்ளது.

தொடர்ந்து இப்பகுதியில் தெருவிளக்கு என்று பெயரளவில் கூட எந்த விளக்குகளும் இல்லாததால் கற்காலத்தில் வாழும் மனிதர்கள் போல் காணப்பட்டு வருகின்றனர்.

தொடர்ந்து சாக்கடை சாலையில் பெருக்கெடுத்து ஓடுவதால் அதிலிருந்து வரும் வாசனை திரவியத்திற்கு பஞ்சமே இல்லை..

பேரூராட்சி அதிகாரிகளிடமும் அரசியல்வாதியிடமும் பலமுறை இப்பகுதி மக்கள் மனுக்கள் புகார்கள் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டு ஓய்வடைந்துவிட்டனர்..

தொடர்ந்து சாக்கடைகளில் இருந்து வரும் புழுக்கள் வீட்டின் வாசலில் வரவேற்பதாக காணப்பட்டு வருகின்றன.

இரவு நேரங்களில் குழந்தைகளை சாக்கடை புழுக்கள் கடித்து வருவதால் பல்வேறு நோய்த் தொற்றுகள் ஏற்பட்டு வருகின்றன. உடனடியாக மாவட்ட ஆட்சியர் சம்பந்தப்பட்ட இடத்திற்கு வருகை தந்து உரிய ஆய்வு மேற்கொண்டு இங்கு வாழ்பவர்களும் மனிதர்கள் தான் என்ற நிலையை நிலை நிறுத்த வேண்டும் என அப்பகுதி பெண்களும் பொது மக்களும் இளைஞர்களும் கண்ணீர் மல்க கோரிக்கை வைத்து வருகின்றன...



■ கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட வடசேரி பேருந்து நிலையத்தில் பகுதியில் தமிழ்நாடு அரசின் சாதனைகள் மற்றும் சிறப்பு திட்டங்கள் குறித்து பொதுமக்கள் அறிந்து கொண்டு பயன்பெறும் வகையில் மாவட்ட செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் புகைப்படக்கண்காட்சி நடைபெற்றது.

# தமிழகத்தில் பிரிவினைவாத கட்சிகளை அப்புறபடுத்த வேண்டும் : இந்து திராவிட மக்கள் கட்சியின் தேசிய தலைவர் ரமேஷ்பாபுஜி

குரோம்பேட்டை. ஜூலை.30

சென்னை அடுத்த குரோம்பேட்டை தனியார் மண்டபத்தில் இந்து இயக்க தலைவர்கள் சங்கமம் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு இந்து புரட்சி முன்னெனி நிறுவனர் சந்திரகுமார் மற்றும் இந்து இயக்க மாநில தலைவர்கள், நிறுவன தலைவர்கள் என 100 க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டு இந்து கோயில்களின் பாதுகாப்பு குறித்து சிறப்புரையாற்றினர்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த இந்து திராவிட மக்கள் கட்சியின் தேசிய தலைவர் ரமேஷபாபுஜி பேசுகையில் தமிழகத்தில் பிரிவினைவாத கட்சிகளை அப்புறபடுத்த வேண்டும் எனவும் சிறையில்





பயங்கரவாதிகளை சந்தித்த சீமான் அவர்களை சித்திரவதை செய்வதாக கூறி ஆதரவாக மதுரையில் ஆர்ப்பாட்ட நடைபெறும் என சீமான் தெரிவித்தார். அப்படி சீமான் ஆர்ப்பாட்டம் செய்தால் சீமானை கண்டித்து மதுரையில் இந்து இயக்க தலைவர்களை ஒன்று திரட்டி மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என தெரிவித்தார்.

# 13 வயது சிறுமியின் மூளை ரத்தக்கசிவுக்குத் தீர்வு கண்ட மீனாட்சி சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை




மதுரை, ஜூலை.30

மதுரை மீனாட்சி சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை, நரம்பியல் சார்ந்த மரபியல் பிரச்சனை ஒன்றுக்கு தனது நிபுணத்துவத்தின் மூலம் த்திருக்கிறது. மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட 13 தீர்வு கண்டு சாதனை படைத்திருக்கிறது. வயது சிறுமி ஒருவருக்கு அபூர்வமான மரபியல் பிரச்சனை இருந்து வந்துள்ளது. ஆபத்தான நிலையில் இருந்த சிறுமிக்கு பயாலஜிக்கல் தெரபி முறையில் இரண்டு ஆண்டுகளாக அவருக்கு மூளையில் ரத்தக் கசிவு ஏற்பட்டு வந்தது. உயிருக்கு ரத்தக்கசிவை நிறுத்தி, அவரது உயிரைக் காப்பாற்றியிருக்கிறது, இப்பரிசோதனையை மேற்கொண்ட மீனாட்சி சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையின் நரம்பியல்சிகிச்சை துறையின் முதுநிலை மருத்துவர் டாக்டர். S நரேந்திரன் இதுகுறித்து பேசியபோது, "DADA2 என்பது, அரிதினும் அரிதான ஒரு மரபியல் கோளாறு ஆகும். அதே வேளையில் இதன் அறிகுறிகள் மற்ற நோய்களின் அறிகுறிகளைப் போலவே தோற்றமளிக்கும். தம். பெரும்பாலும் இப்பிரச்சனை இருப்பவர்கள் ஆண்டுக்கணக்கில் பரிசோதனை செய்துகொள்ளாமல் இருப்பதும் நிகழ்கிறது.

இந்த நோயாளியைப் பொறுத்தவரை எம்.ஆர்.ஐ. ஆஞ்சியோகிராபி சோதனைகளில் கூட அசாதாரணமாக எதுவும் கண்டறியப்படவில்லை என்பதால், ஏதாவது மரபணுக்கோளாறு காரணமாக இருக்குமோ என்று சந்தேகித்தோம். அந்த சந்தேகத்தின் அடிப்படையிலேயே ஹோல் எக்ஸோம் சீக்வென்ஸிங் எனும் முறையை மேற்கொண்டோம். DA-DAZ பிரச்சனைக்கான அறிகுறிகளை அறியும் பரிசோதனை முறை அது தொடக்க நிலையிலேயே மரபியல் பரிசோதனையை மேற்கொண்டதால் துல்லியமான சிகிச்சையளிக்க முடிந்ததுடன் உடல்நிலையில் கூடுதல் சிக்கல்கள் ஏற்படாமலும் தடுக்க முடிந்தது" என்றார்.

இப்பரிசோதனையை மேற்கொண்ட மீனாட்சி சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையின் நரம்பியல்சிகிச்சை துறையின் முதுநிலை மருத்துவர் டாக்டர். S நரேந்திரன் இதுகுறித்து பேசியபோது, "DADA2 என்பது, அரிதினும் அரிதான ஒரு மரபியல் கோளாறு ஆகும். அதே வேளையில் இதன் அறிகுறிகள் மற்ற நோய்களின் அறிகுறிகளைப் போலவே தோற்றமளிக்கும். தம். பெரும்பாலும் இப்பிரச்சனை இருப்பவர்கள் ஆண்டுக்கணக்கில் பரிசோதனை செய்துகொள்ளாமல் இருப்பதும் நிகழ்கிறது.

இந்த நோயாளியைப் பொறுத்தவரை எம்.ஆர்.ஐ. ஆஞ்சியோகிராபி சோதனைகளில் கூட அசாதாரணமாக எதுவும் கண்டறியப்படவில்லை என்பதால், ஏதாவது மரபணுக்கோளாறு காரணமாக இருக்குமோ என்று சந்தேகித்தோம். அந்த சந்தேகத்தின் அடிப்படையிலேயே ஹோல் எக்ஸோம் சீக்வென்ஸிங் எனும் முறையை மேற்கொண்டோம். DA-DAZ பிரச்சனைக்கான அறிகுறிகளை அறியும் பரிசோதனை முறை அது தொடக்க நிலையிலேயே மரபியல் பரிசோதனையை மேற்கொண்டதால் துல்லியமான சிகிச்சையளிக்க முடிந்ததுடன் உடல்நிலையில் கூடுதல் சிக்கல்கள் ஏற்படாமலும் தடுக்க முடிந்தது" என்றார்..

இந்தப் பத்திரிகையாளர் சந்திப்பின்போது நரம்பியல் அறுவை சிகிச்சை துறையின் தலைவர் மற்றும் முதுநிலை நிபுணர் டாக்டர் செல்வ முத்துக்குமரன், நரம்பியல் சிகிச்சை துறையின் தலைவர் மற்றும் முதுநிலை நிபுணர் டாக்டர் விஜய்ஆனந்த், நரம்பியல் அறுவை சிகிச்சை துறையின் முதுநிலை நிபுணர் டாக்டர் செந்தில்குமார் , நரம்பியல் சிகிச்சை துறையின் இணை மருத்துவ நிபுணர் டாக்டர். ஜெபர்லின் சினேகா மற்றும் மருத்துவமனை சார்பில் திலீப் பெர்னார்ட் ஆகியோர் பங்கேற்றனர்.

# வேலூர் மாவட்டம் காட்பாடி கோரத்தாங்கல் கிராமத்தை பாதிக்கும் ரயில்வே சுரங்கப்பாதை மூடல் : பொதுமக்கள் போராட்டம்

வேலூர், ஜூலை.30-

வேலூர் மாவட்டம், காட்பாடியில் இருந்து கோரத்தாங்கல் கிராமத்திற்கு பல ஆண்டுகளாகப் பயன்படுத்தப்பட்டு வரும் ரயில்வே சுரங்கப்பாதையை மூடும் பணியை ரயில்வே நிர்வாகம் மேற்கொண்டு வருகிறது. இதனை கண்டித்து கோரத்தாங்கல் கிராம மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த சுரங்கப்பாதை மூடப்படுவதால், தற்போது நேரடியாக செல்லக்கூடிய பாதை இல்லாமல், சுமார் ஏழு கிலோமீட்டர் வரை சுற்றி செல்ல வேண்டிய கட்டாய நிலை ஏற்படலாம் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.



இதனால், பள்ளி மாணவர்கள், வேலைக்குச் செல்லும் மக்கள் மற்றும் விவசாயிகள் உள்ளிட்ட அனைவரின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்படும் என்றும் கூறுகின்றனர்.

பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளதாவது,

இந்த சுரங்கப்பாதையை மூடுவதற்கு மாற்று ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

சுரங்கம் மூடப்படுவதை தவிர்க்க, பொதுமக்கள் பயணத்துக்கு பாதிப்பில்லாமல் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ள வேண்டும்.

அரசும், ரயில்வே நிர்வாகமும் எங்கள் குரலைக் கேட்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்'' எனக் கிராம மக்கள் வலியுறுத்துகின்றனர். இது குறித்து பொதுமக்கள் அனைவரும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கோரிக்கை மனுவும் கொடுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.




Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS" No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161